www.testpapersfree.com

MGS – PAPER 3

**605 / 9**

தொடக்கநிலை 6

# மாதிரி தேர்வுத்தாள்



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

| / 90 |
|---|




பெற்றோர் கையொப்பம் : ____________________

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்**

www.testpapersfree.com

www.testpapersfree.com



**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. மாணவர்கள் எப்போதும் தெளிவான ____________ செயல்படவேண்டும்.

(1) சிந்தனையின்
(2) சிந்தனையில்
(3) சிந்தனையுடன்
(4) சிந்தனையால் ( )

Q2. சாந்தி கிராமத்து ____________ அமைதியான வாழ்க்கை முறையைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

(1) மக்களுக்கு
(2) மக்களை
(3) மக்களோடு
(4) மக்களின் ( )

Q3. குமரன் ____________ உற்பத்தி செய்யும் ஒரு பெரிய தொழிற்சாலையின் முதலாளி ஆவான்.

(1) கணினிகளுடன்
(2) கணினிகளை
(3) கணினிகளுக்கு
(4) கணினிகளில் ( )

Q4. இரண்டு ____________ யார் மிகுந்த அன்பானவன் என்று அரசர் அறிய விரும்பினார்.

(1) ஆண்மகன்களிடமிருந்து
(2) ஆண்மகன்களுக்கு
(3) ஆண்மகன்களில்
(4) ஆண்மகன்களை ( )

Q5. சேகரன் வியாபாரத்தில் இழந்த ____________ மீண்டும் சம்பாதிக்க வேண்டும் என்று உறுதியளித்தான்.

(1) பணத்தை
(2) பணத்திற்கு
(3) பணத்திலிருந்து
(4) பணத்துடன் ( )

<u>A2 செய்யுள் / பழமொழி</u>

**Q6 முதல் Q10 வரையுள்ள <u>செய்யுள் / பழமொழியை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q6. வருமுன்னர்க் காவாதான் ______________ எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

(1) நம்பிக்கை
(2) வாழ்க்கை
(3) உயர்வு
(4) தாழ்வு ( )

Q7. வல்லவனுக்குப் புல்லும் ______________.

(1) பொருள்
(2) வேண்டும்
(3) பயன்படும்
(4) ஆயுதம் ( )

Q8. இயற்றலும் ____________ காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு.

(1) கழித்தலும்
(2) கூட்டலும்
(3) ஈட்டலும்
(4) பிரித்தலும் ( )

Q9. ______________ அழகு விருந்தோடு உண்டல்.

(1) மந்திரிக்கு
(2) உண்டிக்கு
(3) அகத்தின்
(4) அறிஞர்க்கு ( )

Q10. ______________ துயில் எழு.

(1) வைகறை
(2) அதிகாலை
(3) விரைவாக
(4) சுறுசுறுப்பாக ( )

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. விறகுவெட்டி பிழைப்புக்காகத் தினமும் நூறு மரங்களை வெட்டி ______________.

(1) எடுத்தான்
(2) பிளந்தான்
(3) சாய்த்தான்
(4) எறிந்தான் ( )

Q12. பதுங்கி பதுங்கி வந்த திருடனைக் காவலர் ____________ விசாரித்தார்.

(1) நிறுத்தி
(2) கேட்டு
(3) விரட்டி
(4) பார்த்து ( )

Q13. இரவில் அரசியைக் கண்டுபிடிக்கச் சேவகர்கள் கையில் விளக்கை ____________ சென்றனர்.

(1) கிடத்தி
(2) பற்றி
(3) தாங்கி
(4) ஏந்தி ( )

Q14. வானொலியில் ______________ பாடல்கள் அனைவரையும் கவர்ந்தன

(1) ஒலியேறிய
(2) ஒலியேற்ற
(3) ஒலியேறும்
(4) ஒலியேற ( )

Q15. ஒரு மாமரத்தில் மாம்பழங்கள் பழுத்து ______________.

(1) குலுங்கின
(2) தொங்கின
(3) விழுந்தன
(4) வளர்ந்தன ( )

**A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

ஒரு ஊரில் ஜானி என்னும் ஒரு நெசவாளி இருந்தான். அவனுக்கு ஐந்து பெண் குழந்தைகள் இருந்தன. அவனுக்கு வருமானம் மிகக் குறைவாக இருந்ததால் அவனுடைய குடும்பத்தினருக்கு ஒருவேளை சாபிடுவதே பெரும் **Q16** ____________ இருந்தது. குழந்தைகள் எப்போதும் **Q17** ______________ ஆடைகளுடன் இருந்தனர். இந்நிலையில் புது வருடம் பிறக்கவிருந்தது. ஜானி தன்

www.testpapersfree.com



குழந்தைகளுக்குப் புது ஆடைகள் வாங்கித் தர ஆசைப்பட்டான். என்ன செய்யலாம் என்று எண்ணியிருந்த வேளையில் ஒரு கடை முதலாளி அவனை **Q18** ____________________.

அந்தக் கடை முதலாளி நூறு மீட்டர் துணி நெய்து கொடுத்தால் பணம் கொடுப்பதாகச் சொன்னார். அந்த ஆசையில் ஜானி உடனே துணி நெய்ய **Q19** ________________. அவனின் மனைவியும் குழந்தைகளும் கூட அவனுக்கு உதவி செய்தனர். அவன் புது வருடத்திற்கு முன் தினம் நெய்த துணியுடன் கடைக்குச் சென்றான். கடை முதலாளி நெய்த துணிகளைப் பார்த்தவுடன் மிகுந்த **Q20** ____________________ அடைந்தார். அவர் ஜானிக்கு நிறையப் பணத்தைக் கொடுத்ததோடு அவனை நிரந்தரமாகத் தன் கடையில் வேளையில் அமர்த்தினார்.

Q16. (1) துயரமாக
(2) கலக்கமாக
(3) கஷ்டமாக
(4) வேதனையாக ( )

Q17. (1) கிழிந்த
(2) குட்டையான
(3) அசுத்தமான
(4) தீய்ந்த ( )

Q18. (1) கண்டார்
(2) அணுகினார்
(3) ஆதரித்தார்
(4) கண்காணித்தார் ( )

Q19. (1) முடிவெடுத்தான்
(2) யோசித்தான்
(3) விரும்பினான்
(4) ஆரம்பித்தான் ( )

Q20. (1) சலிப்பு
(2) அதிர்ச்சி
(3) பெருமை
(4) ஆனந்தம் ( )

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

அக்பர் ஒரு நாள் தன் குதிரை மீதேறிச் தோட்டத்தில் வலம் வந்து கொண்டிருந்தார். அரண்மனைத் தோட்டம் எங்கிலும் அழகிய பச்சை மரங்களும் அடர்த்தியான புல் வெளிகளும் இருந்தன. அந்த எழில் மிகுந்த பசுமையைக் கண்டு அக்பர் பரவசமடைந்தார். " இத்தகைய தோட்டத்தில் ஒரு பச்சை குதிரை மீது ஏறி வலம் வந்தால் எப்படி இருக்கும்!" என அவர் தனக்குத்தானே கூறிக் கொண்டார். சற்று நேரம் கழித்து, அவர் பீர்பாலிடம் ஏழு நாட்களுக்குள் ஒரு பச்சைக் குதிரையை வாங்கி வர வேண்டும் எனக் கட்டளையிட்டார்.

பச்சை நிறக் குதிரை இருக்கவே முடியாது என்ற உண்மை அக்பருக்குத் தெரிந்தும், பீர்பாலின் புத்திக்கூர்மையைச் சோதிக்க அவர் அவ்வாறு கேட்டார். இதனையறிந்த பீர்பால் பச்சைக் குதிரையைத் தேடும் பாவனையில் ஏழு

www.testpapersfree.com



நாட்கள் நகரத்தில் அங்கும் இங்குமாக அலைந்தார். எட்டாவது நாளன்று பீர்பால் அக்பரிடம், " மன்னரே! நான் பச்சைக் குதிரையைக் கண்டுபிடித்துவிட்டேன்," என்றார். அக்பர் ஆச்சரியத்தோடு , " எங்கே அந்தப் பச்சைக் குதிரை ? உடனே அதைக் காட்டு!" என்றார்.

"மாண்புடையீர்! அது சற்றுச் சிரமமான காரியம். பச்சைக் குதிரையின் உரிமையாளர் இரண்டு முக்கிய நிபந்தனைகளை விதித்துள்ளார். முதல் நிபந்தனை என்னவென்றால் குதிரையை வாங்கத் தாங்களே நேரில் செல்ல வேண்டும்," என்று கூறினார் பீர்பால். " சரி, அவ்வளவுதானே, நானே சென்று வாங்கி வருகிறேன் . இரண்டாவது நிபந்தனையைக் கூறவும்!" என்றார் அக்பர்.

"குதிரை ஒப்பற்ற நிறமுடையது. அதனால், அதை ஒரு குறிப்பிட்ட சிறப்பான நாளன்று தான் வாங்க முடியுமாம். நிலவே தோன்றாத பௌர்ணமி நாளில் வியாபாரத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்பது குதிரை உரிமையாளரின் இரண்டாவது நிபந்தனை, மன்னா!" என்றார் பீர்பால். அதைக் கேட்ட அக்பர் வாயடைத்துப் போனார். "பௌர்ணமி அன்று முழு நிலவு தோன்றும் அல்லவா? நிலவே தோன்றாத பௌர்ணமி நாளே கிடையாதே!" என்றார் அக்பர். பின் பீர்பாலின் அறிவாற்றலைக் கண்டு வியந்து, அவரை முட்டாள் ஆக்குவது அவ்வளவு எளிதல்ல என்பதை அக்பர் உணர்ந்தார்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q21 அக்பர் எதனால் பெரும் மகிழ்ச்சியடைந்தார்?

(1) தோட்டத்தில் ஒரு பச்சைக் குதிரையைக் கண்டு
(2) தான் குதிரையில் வலம் வந்ததை எண்ணி
(3) தோட்டத்தின் செழிப்பான தோற்றத்தைப் பார்த்து
(4) பீர்பால் தன்னோடு இருப்பதை எண்ணி ( ).

Q22. அக்பர் பீர்பாலுக்கு இட்ட கட்டளை என்ன?

(1) ஏழு நாட்களுக்குள் பீர்பால் ஒரு பச்சைக் குதிரையைக் கண்டுபிடிப்பது
(2) ஏழு நாட்களுக்குள் பீர்பால் ஒரு பச்சைக் குதிரையில் வலம் வருவது
(3) ஏழு நாட்களுக்குள் பீர்பால் ஒரு பச்சைக் குதிரையை வாங்கி வருவது
(4) ஏழு நாட்களுக்குள் பீர்பால் ஒரு பச்சைக் குதிரையின் இருப்பிடத்தைக் கண்டறிவது

( )

Q23. பீர்பால் ஏன் குதிரையைத் தேடும் பாவனையில் நகரத்தில் அலைந்தார்?

(1) அக்பரின் கட்டளையை மீற விரும்பாததால்
(2) பச்சைக் குதிரையை எங்கும் கண்டுபிடிக்க முடியாது என்பதால்
(3) பச்சைக் குதிரையை எப்படியாவது தேட முனைந்ததால்
(4) தனது அறிவாற்றலை நிரூபிக்க எண்ணியதால் ( )

Q24. பீர்பால் எவ்வாறு தனது புத்திக்கூர்மையை வெளிப்படுத்தினார்?

(1) பச்சைக் குதிரையை வாங்க அக்பரே நேரில் செல்ல வேண்டும் என்று சொல்லி
(2) தான் பச்சைக் குதிரையை வாங்க வேண்டும் என்று சொல்லி
(3) நிலவு தோன்றாத பௌர்ணமி நாளில் பச்சரிக் குதிரையை வாங்க வேண்டும் என்று சொல்லி
(4) முழு நிலவன்று பச்சைக் குதிரையை வாங்க வேண்டும் என்று சொல்லி
( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. நிபந்தனை

(1) கட்டுப்பாடு
(2) விதிமுறை
(3) குறிக்கோள்
(4) கட்டளை ( )

www.testpapersfree.com



C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**


| | | |
|---|---|---|
| Q26. | பெரியம்மா சமையல் வேலையைச் சீக்கிரம் முடிக்க எண்ணினார். அதனால், அவர் அக்காவிடம் காய்கறிகளை ____________ கொடுக்கும்படி சொன்னார். | Q26 ( ) |
| Q27. | மினுக்கா மிகவும் அறிவுள்ள ____________. எங்காவது ஒரு சத்தம் கேட்டாலோ நாற்றம் வீசினாலோ அது என்ன என்று ஆராய்ந்து பார்த்துவிடும். | Q27 ( ) |
| Q28. | ஆசிரியர் மாணவர்களுக்குச் சில கவிதைகளை படித்துக் காட்டினார். பிறகு, மாணவர்கள், முதன்முறையாகத் தங்களின் ____________ முயற்சியில் கவிதைகள் எழுதினர். | Q28 ( ) |
| Q29 | நான் பலமுறை உறக்கக் கூறியும் என் பாட்டிக்கு நான் சொன்னது புரியவில்லை. அவர் தன் புருவத்தை ____________ என்னைப் பார்த்தார். | Q29 ( ) |

www.testpapersfree.com


| | |
|---|---|
| (1) கன்னி | (5) நெரித்து |
| (2) அறிந்து | (6) விலங்கு |
| (3) நெறித்து | (7) அரிந்து |
| (4) விளங்கு | (8) கண்ணி |

D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

**சிறுவர் தினக் கொண்டாட்டம்**
**தேவன் வானொலி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ---- கட்டணம் $3 மட்டுமே !**



நாள் : 10 . 10 . 2018
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
இடம் : ஏரிக்கரை பூங்கா , 19 சுவாங் சூ சாலை, சிங்கப்பூர் 680458

- சிற்றுண்டி மற்றும் அன்பளிப்புகள் இலவசம்
- இடைவிடாப் பற்பல கேளிக்கை விளையாட்டுகளை இலவசமாக விளையாடி மகிழலாம்!!

**கொண்டாட்டத்தின் முக்கிய அம்சங்கள் !!!**

- தொடங்கும் நேரம் : காலை 11 மணி
- அரைமணி நேரத்திற்கு முன்பே போட்டியாளர்கள் ஏரிக்கரை சந்திப்புக்கு கூடத்திற்கு வரவேண்டும்
- தாமதமாக வருவோர் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்

**5 மற்றும் 6 வயதுக்கு உட்பட்டோர் --- வண்ணம் தீட்டும் போட்டி**

- முதல் மூவருக்கு தண்ணீர்ப்புட்டி கிடைக்கும்
- கலந்துகொள்ளும் அனைவருக்கும் சான்றிதழும் பென்சில் பெட்டியும் கிடைக்கும்

www.testpapersfree.com



| **7 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்டோர் ---- 'மணல் வீடு கட்டும் போட்டி'** |
|---|
| ✓ முதல் மூவருக்கு கோப்பைகள் கிடைக்கும்<br>✓ மற்ற அனைவர்க்கும் சான்றிதழும் பென்சில் பெட்டியும் கிடைக்கும் |
| **சிறப்புச் சலுகைகள்** |
| ❖ பதிவு செய்யும் முதல் பாத்து சிறுவர்களுக்கு வானொலி படைப்பாளர்களுடன் 'மாணவர் நேரம்' என்ற நிகழ்ச்சியைப் படைக்க ஒரு வாய்ப்பு!<br>❖ அதிர்ஷ்டக் குலுக்களில் தேர்ந்தெடுக்கப்படும் ஐவருக்குப் பிரபல படைப்பாளர் திரு ஆர்யாவுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. |

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்னை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. திரு ஆர்யா யாருடன் புகைப்படம் எடுத்துக்கொள்வார்?

(1) மூன்று வெள்ளி கட்டணம் செலுத்தியவருடன்
(2) அதிர்ஷ்டக் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படுபவருடன்
(3) வண்ணம் தீட்டும் போட்டியில் பங்கேடுபவருடன்
(4) முதன்முதலில் பதிவு செய்பவருடன் ( )

Q31. பதிவு செய்யும் முதல் சிறுவனுக்கு என்னவெல்லாம் காத்துக்கொண்டிருக்கின்றன?

(1) வானொலியில் நிகழ்ச்சி படைக்க, சிற்றுண்டி, கேளிக்கை விளையாட்டுக்கள் மற்றும் சான்றிதழ்.
(2) அன்பளிப்புகள், வானொலியில் நிகழ்ச்சி கேட்க, கேளிக்கை விளையாட்டுக்கள் மற்றும் சிற்றுண்டி
(3) கேளிக்கை விளையாட்டுக்கள், பென்சில் பெட்டி, அன்பளிப்புகள் மற்றும் சிற்றுண்டி
(4) சிற்றுண்டி, அன்பளிப்புகள், வானொலியில் நிகழ்ச்சி படைக்க மற்றும் கேளிக்கை விளையாட்டுக்கள் ( )

Q32. கேளிக்கை விளையாட்டுகளுக்கு ஏன் கட்டணம் கிடையாது?

(1) சிறுவர்கள் ஏற்கனவே மூன்று வெள்ளி கட்டணம் செலுத்திவிட்டதால்

(2) இடைவிடாக் கேளிக்கை விளையாட்டுக்கள் நடைபெறுவதால்
(3) சிறுவர்களைக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்க ஈர்ப்பதற்காக
(4) சிறுவர்கள் கொண்டாட்டத்தில் மகிழ்ச்சியாக இருப்பதற்காக ( )

Q33. மணல் வீடு கட்டும் போட்டியில் பங்கெடுக்க விரும்பும் சிறுவர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு தகவல்களைக் குறிப்பிடுக.

( 4 மதிப்பெண்கள் )

www.testpapersfree.com



**D8 சுயவிடை கருத்தறித்தல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

முற்காலத்தில் சீன நாட்டில், வீ என்ற ஓர் ஆராய்ச்சியாளன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சமயம், தன் ஆராய்ச்சியின் மூலம் ஒரு பள்ளிக்கூடத்தின் முன் உள்ள நிலத்தின்கீழ் தங்கக்கட்டிகள் இருப்பதை அறிந்தான். ஆகையால், அந்நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தான். இதனைக் கண்ட ஊர்மக்கள் அவனைப் பைத்தியக்காரன் என்று சொல்லி கேலியும் கிண்டலும் செய்தனர்.

வீ அவர்களை பொருட்படுத்தாமல் தொடர்ந்து குழியைத் தோண்டினான். இருப்பினும் நான்கு அடிகள் வரை வெறும் கற்களும் மண்ணுமாகவே வெளிவந்தன. ஊர்மக்கள் மென்மேலும் அவனைக் கேலியும் கிண்டலும் செய்தனர். அதைக் கண்ட வீக்கும், தங்கக்கட்டிகள் இருக்குமா என்ற சந்தேகம் எழுந்தது. வீ கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையை இழக்கத் தொடங்கினான். அவன் மேற்கொண்டு இன்னும் ஏழு அடிகள் தோண்டவே பெரிய கற்கள் மட்டுமே வெளிவந்தன. அதோடு அவனுக்குத் தொடர்ந்து தோண்டுவதும் சிரமமாகிக்கொண்டு வந்தது. அங்குள்ள மக்கள், " அங்கு எதுவும் இருக்காது! வேறு வேலை இருந்தால், போய் பார் !" என்று கூறி அவனைக் கண்டு நகைத்தனர். வீ விரக்தியில் கையில் இருந்த கடப்பாரையைத் தூக்கி எறிந்துவிட்டு, ஏமாற்றத்துடன் வீட்டிற்கு கிளம்பினான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவ்வழியே ஒரு சுற்றுப்பயணி வந்தார். வீ தோண்டிய குழி அப்படியே இருந்தது. அதை பற்றி அங்குள்ள மக்களிடம் விசாரித்து விவரங்களைத் தெரிந்து கொண்டார் .சுற்றுப்பயணி, மறுகணமே அக்குழியினுள் இறங்கினார்.அவர் குழியின் மூலையில் கிடந்த கடப்பாரையை எடுத்துத் தோண்ட ஆரம்பித்தார். ஊர்மக்கள் வீயைப் போலவே சுற்றுப்பயணிக்கும் பைத்தியமும் பேராசையும் பிடித்துவிட்டது என எண்ணிக் கேலியாக நகைத்தனர்.

சுற்றுப்பயணி சற்றும் சலிக்காமல் தொடர்ந்து குழியைத் தோண்டினார். அப்போது "டங்" என்று ஒரு சத்தம் கேட்டது. அனைவரும் மௌனமாகி

ஆச்சரியத்துடன் குழியை நோக்கிப் பார்த்தனர். சுற்றுப்பயணி கடப்பாறையை வீசிவிட்டு மண்ணைத் தன் கைகளால் அகற்ற முற்பட்டார். என்ன ஆச்சர்யம்! தங்கக்கட்டிகள் கண்ணைக் கவரும் வண்ணம் மின்னின. அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு சுற்றுப்பயணி வந்த வழியே சென்றுவிட்டார். இதையெல்லாம் கண்ட ஊர் மக்கள் வாயடைத்து நின்றனர். இதையறிந்த வீ பெரிதும் வருந்தினான். அவன் இன்னும் சற்று பொறுமையைக் கடைபிடித்து ஊர் மக்களின் கேலிக்கு இடம் கொடுக்காமல், விடாமுயற்சியுடன் கூடுதலாக இரண்டு அடிகள் தோண்டியிருந்தால் பணக்காரன் ஆயிருப்பானே!

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. வீ எப்போது நிலத்தைத் தோண்டத் துவங்கினான்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________

Q35. வீ தொடர்ந்து மக்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________

Q36. ஏழு அடிகள் தோண்டிய வீக்கு என்ன ஆயிற்று? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

__________

Q37. வீ நிலத்தைத் தாண்டுவதில் காட்டிய ஈடுபாடு இறுதிவரை நீடிக்கவில்லை என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? (3 மதிப்பெண்கள்)

www.testpapersfree.com



Q38. ஊர்மக்கள் ஏன் சுற்றுப்பயணியைக் கேலி செய்தனர்? ( 3 மதிப்பெண்கள் )

Q39. வீ எதனால் வருந்தினான்? ( 4 மதிப்பெண்கள் )





40 TH QN MISSING

www.testpapersfree.com

# MGS PAPER 3

## தொடக்க நிலை 6

| | | | |
|---|---|---|---|
| வி1) 3 | வி11) 3 | வி21) 3 | வி31) 4 |
| வி2) 4 | வி12) 1 | வி22) 3 | வி32) 1 |
| வி3) 2 | வி13) 4 | வி23) 4 | |
| வி4) 3 | வி14) 1 | வி24) 3 | |
| வி5) 1 | வி15) 1 | வி25) 2 | |
| வி6) 2 | வி16) 3 | வி26) 7 | |
| வி7) 4 | வி17) 1 | வி27) 6 | |
| வி8) 3 | வி18) 2 | வி28) 1 | |
| வி9) 2 | வி19) 4 | வி29) 5 | |
| வி10) 1 | வி20) 4 | வி30) 2 | |

www.testpapersfree.com

www.testpapersfree.com

33) மணல் வீடு கட்டும் போட்டியில் பங்கெடுக்க விரும்பும் சிறுவர்கள் 7 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கட்டணம் $3 வெள்ளி செலுத்தி பதிவு செய்ய வேண்டும். நிகழ்ச்சிக்கு அரை மணி நேரம் முன்பே ஏற்கனவே சந்திப்புக்கு கூடத்திற்கு வர வேண்டும்.

34) வீ தனது அக்ராம்ச்சியின் மூலம் பள்ளிக்கூடத்தின் முன் உள்ள நிலத்தின் அடியில் தங்கக் கட்டிகள் இருப்பதை அறிந்த போது நிலத்தை தோண்டத் துவங்கினான்.

35) வீ ஊர் மக்கள் தன்னை வைத்தியக்காரன் என்று கூறிய போதும் அதை பொருட்படுத்தாமல் தொடர்ந்து குழி தோண்டிய போது, அதில் வெறும் கற்களும் மண்ணுமே வெளிவந்தன. இதன் காரணமாக வீ தொடர்ந்து மக்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானா

36) இரு அடிகள் தோண்டிய வீக்கு பெரிய கற்கள் மட்டுமே கிடைத்தன, அதோடு தொடர்ந்து தோண்டுவதும் சிரமம் ஆயிற்று.

37) வீ தொடர்ந்து தோண்ட சிரமப்பட்டதன் மூலமும் மக்கள் நகைப்பை கேட்டு விரக்தி அடைந்து கையில் இருந்த கடப்பாரையை தூக்கி எறிந்தன

www.testpapersfree.com

www.testpapersfree.com

மூலமும் வீ நிலத்தைத் தோண்டுவதில் காட்டிய ஈடுபாடு இறுதிவரை நீடிக்கவில்லை என்பதை நாம் அறியலாம்.

38) நீண்ட நாட்களுக்கு பிறகு அவ்வழியே வந்த சுற்றுப்பயணி, அக்குழியை கண்டு அதன் விபரத்தை மக்கள் மூலம் தெரிந்து கொண்ட மறுகணம் அக்குழியில் இறங்கி மூலையில் கிடந்த கடப்பாரையை எடுத்து குழியை தோண்ட ஆரம்பித்தார். இதைக் கண்ட ஊர்மக்கள் சுற்றுப்பயணிக்கு பைத்தியமும் பேராசையும் பிடித்துவிட்டது எனக் கூறி கேலி செய்தனர்.

39) வீ சற்று பொறுமையை கடைபிடித்து ஊர் மக்களின் கேலிக்கு இடம் கொடுக்காமல், விடாமுயற்சியுடன் கூடுதலாக இரண்டு அடிகள் தோண்டியிருந்தால் பணக்காரனாக மாறியிருப்பான். ஆனால் அவ்வாறு செய்யாததை எண்ணி வீ வருந்தினான்.

www.testpapersfree.com